**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No.162-2025**

Deposition of LW 18 | Additional witness Examined as :PW

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இளங்கோவன் | Defence | : | |
| Father Name | : | ஜெயராமன் | Court | : | |
| Village | : | சிறப்பு உதவி ஆய்வாளர், செம்பனார்கோவில் காவல் நிலையம் | Taluk | : | |
| Calling | : | | | : | |
| Age | : | 53/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 10.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமாறன், காவல் ஆய்வளார்கள் சுகந்தி மற்றும் செல்வி ஆகியோர்களின் கையெழுத்து நன்கு பரிட்சையம், இந்த வழக்கின் சாட்சிகள் போலிசார் விசாரணைக்கு மாறுப்பட்ட சாட்சியங்கள் அளித்திருப்பதால் ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.07.2021ம் தேதி 13.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமாறன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது ராமலிங்கம் த/பெ. விஸ்வநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்றார். **அந்த புகார் மனு அசாஆ 2ஆக குறியீடு செய்யப்படுகிறது** பின்னர் காவல் நிலைய குற்ற எண் 648/2021, இதச பிரிவுகள் 279, 337, 304(A) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் இந்த வழக்கினை காவல் ஆய்வாளர் சுகந்தி அவர்கள்

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் கல்யாணசுந்தரம் மற்றும் சுசீந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **பார்வைமகசர் மற்றும் வரைபடத்தினை தயார் செய்தார் அவை முறையே அசாஆ 4 மற்றும் அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது,**

3. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்தார். பின்னர் விபத்தில் இறந்த சுரேஷ் என்பவரின் சடலத்தின் மீதான விசாரணையை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பிரேத விசாரணை செய்த மருத்துவர் நவீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். **அந்த பிரேத பரிசோதனை சான்று அசாஆ7 ஆக குறியீடு செய்யபடுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்ட வீரதினகருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணவேலு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த காயச்சான்றிதழை பெற்றார். அந்த **காயச்சான்றிதழ் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5. அசா2 ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச பரிவுகள் 279, 337, 304(A) ல் இருந்து இதச பிரிவுகள் 279, 338, 304(A) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை தயார் செய்தார். அந்த **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்பு வழக்கில் சம்மந்தபட்ட எதிரியை கடந்த 16.08.2021ம்தேதி 12.00 மணிக்கு செம்பனார்கோவில் காவல் நிலையம் முன்பு ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையப்பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த விபத்தில் ஈடுபட்ட இரு சக்கர வாகனம் TN 82 2120 என்ற பதிவெண் கொண்ட Scotty pep plus மற்றும் TN 51 T 9878 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு உட்படுத்தி ஆய்வாளர் ராம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் கொடுத்த சான்றிதழை பெற்றார். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 24.09.2021

தேதி  காவல் ஆய்வாளர் செல்வி அவர்கள் இதச சட்டபிரிவுகள் 279, 338, 304(A) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்து எதிரியின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவரின் அஜாக்ரதைதான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டப்படி இழப்பீடு பெறுவதற்காக தவறான சங்கதிகளின் அடிப்படையில் கொடுக்கப்ட்ட புகாரினை ஆய்வாளர் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிமீது வழக்கு பதிவு செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**